# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

<u>ஆணை எண்: 327/மா/2025</u>

<u>நாள்: 09.06.2026</u>

C. ஹரிபாபு,
ஆவடி, சென்னை-55. --- முறையீட்டு மனுதாரர்

1. ஆணையாளர்,
   ஆவடி மாநகராட்சி.

2. M/s Sugali Enterprises Pvt. Ltd.,
   சென்னை-102. --- எதிர்மனுதாரர்கள்

சென்னை-600 055, ஆவடி, மிட்டணமல்லி, ஹை ஸ்கூல் தெரு, கதவு எண் 21 என்ற முகவரியில் வசிக்கும் திரு. C. ஹரிபாபு என்பவரின் 21.08.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 22.08.2025 அன்று பெறப்பட்டு 327/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

<u>ஆணை</u>

சென்னை-600 055, ஆவடி, மிட்டணமல்லி, ஹை ஸ்கூல் தெரு, கதவு எண் 21 என்ற முகவரியில் வசிக்கும் திரு. C. ஹரிபாபு என்பவர் தனது 21.08.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

> "ஆவடி மாநகராட்சிக்கு உட்பட்ட மண்டலம்-1, வார்டு-3, மிட்டணமல்லி கிராமத்தில் மனை பிரிவுகளாக அமைக்கப்பட்டுள்ள நில உரிமையாளர் (மெஸ்ஸர்ஸ் சுகாலி எண்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநர்) திரு. கே. ராகேஷ் குமார், கதவு எண் 45/32, ஏ-பிளாக், இரண்டாவது தளம், பிளாட் எண் 53, 6வது தெரு, அண்ணா நகர், சென்னை-600 102 என்பவர் மிட்டணமல்லி கிராமத்தில் மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு CMDA அனுமதி அளித்த வரிசை எண் 234, ஒப்புதல் எண் ppt/LO எண்234/2024, திட்ட அனுமதி எண் 159052, கோப்பு எண் 0131/2024, நாள் 23.10.2024, மொத்தம் மனை சதுர மீட்டர் 26308, நகர நில அளவை எண் 17/9, 17/11, 22/2, 22/5, 22/6, 22/8, 22/9, 22/11, 23/2, 23/3, 23/7, 23/8 மற்றும் 24/1, பிளாக் எண் 5, மிட்டணமல்லி கிராமம், ஆவடி வட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில் அடங்கிய நிலத்தினை குடியிருப்பு மனைகளாக மனைப்பிரிவு செய்வது சட்டத்திற்கு புறம்பாக பல விதிமீறல்கள் உள்ளன. லஞ்சம் வாங்கிக் கொண்டு CMDA அதிகாரிகள் & ஆவடி மாநகராட்சி அதிகாரிகள் சட்டத்திற்கு புறம்பாக அனுமதி வழங்கியுள்ளார்கள். இதை ஆய்வு செய்து சட்டப்படி ஒப்புதல் அளித்த மனை பிரிவு சப் டிவிசன் கோப்பு அங்கீகாரத்தை ரத்து செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.
>
> ஆவடி மாநகராட்சி நகரமைப்பு பிரிவு அதிகாரிகளால் வழங்கப்பட்ட கோப்புகள் Service Request No.012/CP/25-26/0000999 ஏப்ரல் 07 வருடம் 2025 Application No.11/4/2025 SUGALI ENTERPRISES PRIVATE LIMITED DURGAIAMMAN KOIL ST 1 முதல் 154 மனை உட் பிரிவு சர்வே எண் 17/9,11,22/2,5,6,8,9,11, 23/2,3,7,8 & 24/1 மண்டலம் 1, வார்டு 3, மிட்டணமல்லி.

இந்த லேஅவுட் மனைப்பிரிவுக்கு போகும் வழி சட்டவிதிகள்படி தார் சாலை சுமார் 31 அடி இருக்க வேண்டும். லஞ்சத்தை வாங்கி கொண்டு சட்டத்திற்கு விரோதமாக 16அடி இருக்கும் தார் சாலை போகும் வழி சட்ட விதிகள் விதிமுறைகள் தெரிந்தும் ஆவடி மாநகராட்சி நகரமைப்பு பிரிவு அதிகாரிகள் தவறு செய்யப்பட்டுள்ளார்கள். இது மட்டும் இல்லாமல் அந்த லே–அவுட் மனை உரிமையாளர் லே–அவுட் மனை இருந்து அரசு சொந்தமான வண்டிப்பாட்டை இடத்தை அருகில் உள்ள பைபாஸ் சாலை வரை ஆக்கிரமித்து தார் சாலை தன்னிச்சையாக போடப்பட்டுள்ளது. சுமார் 8 கோடி மதிப்புள்ள வண்டிப்பாட்டை இடத்தை ஆவடி மாநகராட்சி பொறியியல் அதிகாரிகளிடம் இருந்து தார் சாலை அமைப்பதற்கு டெண்டர் எதுவும் விடப்படவில்லை. லே–அவுட் உரிமையாளரே தன்னிச்சையாக தார் சாலை அந்த லே–அவுட் மனைகள் விற்பனை செய்வதற்கு போடப்பட்டுள்ளது. லே–அவுட் மனை 6 $^{1}/_{2}$ ஏக்கர் உள்ள பகுதியில் கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது. இது தரம் இல்லாமல் கால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. பல்லாயிரக்கணக்கான வீடுகள் அங்குள்ள கழிவுகள் போவதற்கு சரியான முறையில் கால்வாய்கள் அமைக்கப்படவில்லை. இது மட்டுமில்லாமல் லே–அவுட் மனை தாழ்வான பகுதி உள்ளது. மழைக் காலங்களில் முழங்கால் அளவு தண்ணீர் தேங்கி நிற்கும். வீடுகள் கட்டப்பட்டால் மழைநீர் தண்ணீர் தேங்கி வீடுகளுக்கு வருவதற்கு வாய்ப்பு உள்ளது. சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. சுமார் 100 ஏக்கர் விவசாய இடத்தை அழித்து மக்கள் பயன்பாட்டிற்காக வீட்டுமனைகளாக பிரிக்கப்பட்டு பணிகள் செய்து வருகிறார்கள்.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, மாநகராட்சிகளின் சட்டம் மற்றும் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971 கீழ் வசூலிக்கப்பட வேண்டிய கட்டண லே–அவுட் மனை சப் டிவிஷன் மனைகளுக்கு ஆவடி மாநகராட்சி நகரமைப்பு பிரிவு அதிகாரிகள் கட்டணம் குறைவாக வசூல் செய்துள்ளார்கள்.

இதனால் ஆவடி மாநகராட்சிக்கு இழப்பீடு நடந்துள்ளது. Layout மனை அங்கீகாரத்தை ரத்து செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இப்புகார் மீது நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் சென்னை உயர்நீதிமன்றத்தில் பொது நல வழக்காக தாக்கல் செய்வேன் என்று தாழ்மையுடன் தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.''

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 25.09.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஆவடி மாநகராட்சி ஆணையாளரிடம் கோரப்பட்டது.

3. ஆவடி மாநகராட்சி ஆணையாளர் தனது 31.10.2025 மற்றும் 24.03.2026 நாளிட்ட கடிதங்களில் ந.க. எண் 10089/2024/எப்2–ல் கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.

<u>31.10.2025 மற்றும் 24.03.2025 நாளிட்ட அறிக்கை:</u>

''(1) ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மிட்டணமல்லி கிராமம், சர்வே எண் 17/9, 17/11, 22/2, 5, 6, 8, 9, 11, 23/2, 3, 7, 8 மற்றும் 24/1, பிளாக் எண் 5–இல் 26,308 சதுர மீட்டர் இடத்தில் 154 மனைகள் கொண்ட மனைப்பிரிவு அமைக்க சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அனுமதி எண் PPD/LO NO:234/2024 நாள் 23.10.2024, கடித எண் Layout-1/13/2024 நாள் 23.10.2024–இல் அனுமதி அளித்து ஆவடி மாநகராட்சியில் பெறப்பட்டு மேல்நடவடிக்கை தொடரும் பொருட்டு மேற்கண்ட மனைப்பிரிவு வரைபடம் மற்றும் உத்திரவு நகல்கள் பொறியியல் பிரிவிற்கு (சாலை, கழிவு நீர் கால்வாய், குடிநீர், மின்சார வசதி செய்ய) 25.11.2024–இல் அனுப்பி வைக்கப்பட்டது.

(2) மேற்கண்ட மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகள் அனைத்தும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் ஆவடி மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் மனுதாரரே சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் ஆகியன அமைத்துக் கொடுத்துள்ளார். மேலும் மின்வாரியம் மூலம் 25 எண்ணிக்கை மின்கம்பிகள் அமைக்கப்பட்டு, சோலார் மின்விளக்குகள் 40 எண்ணிக்கை மாநகர

பொறியாளர் அவர்கள் முன்னிலையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய், மின்விளக்குகள் தரமானதாக உள்ளது என மூன்றாம் நபரான Vel Tech பொறியியல் கல்லூரி பேராசிரியர்கள் மூலம் சான்றளிக்கப்பட்டுள்ளது. மேலும் குடிநீர் வசதிக்கு 6.00 இலட்சமும், பாதாள சாக்கடை வசதிக்கு 21.40 இலட்சம் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு மேற்படி தொகை மற்றும் நகரமைப்பு பிரிவு மூலம் வசூலிக்கப்படும் தொகை கீழ்க்கண்டவாறு:

| | | |
|---|---|---|
| • அனுமதி கட்டணம் | : | 55,000/– |
| • மற்ற கட்டணம் | : | 75,000/– |
| • உட்பிரிவு கட்டணம் | : | 80,000/– |
| • குடிநீர் கட்டணம் (பொறியியல் பிரிவு) | : | 6,00,000/– |
| • வைப்புத் தொகை | : | 7,00,000/– |
| • பாதாள சாக்கடை கட்டணம் | : | 21,40,000/– |
| • கொடி நாள் | : | 1,56,000/– |
| மொத்தம் | : | ரூ. 38,06,000/– |

ஆக மொத்தம் ரூ.38,06,000/– (முப்பத்தி எட்டு இலட்சத்து ஆறு ஆயிரம் மட்டும்) மாநகராட்சி கருவூலத்தில் onlineமூலம் செலுத்தப்பட்டுள்ளது. இரசீது எண் 012/CP/25–26/0001796/9.04.2025, மேலும் 154 மனைகளுக்கும் மாநகராட்சி வருவாய் பிரிவு மூலம் 13 அரை ஆண்டு காலிமனை வரி விதிப்பு செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சாலை தான ஆவண நகல் மற்றும் இறுதி ஒப்புதல் வழங்க மாநகராட்சி மாமன்ற ஒப்புதலுக்கு வைக்கப்பட்டு மன்ற தீர்மான எண் 2764, நாள் 27.02.2025. அதனைத் தொடர்ந்து மன்றம் அனுமதி அளித்துள்ளது.

(3) மேற்படி மனைப்பிரிவிற்கு வார்டு A, பிளாக் எண் 5, நில அளவு எண்கள் 16, 1, 14/5, 11/2–இல் கண்ட வண்டிப்பாட்டை என்கிற வகைப்பாட்டில் உள்ள சாலை அணுகு சாலை வைத்து சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் மனைப்பிரிவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சாலை தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி விதிகள் 2019–இல் தெரிவித்துள்ள விதிகளுக்கு உட்பட்ட சாலை என்பதால் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் மேற்படி சாலையை அணுகுசாலையாக கொண்டு மனைப்பிரிவு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(4) மேலும் மனுதாரரால் அந்த வண்டி பாட்டை சாலை தன் சொந்த செலவில் மேம்பாடு செய்வதாக தெரிவித்து கடிதம் கொடுக்கப்பட்டதை தொடர்ந்து வட்டாட்சியர் ஆவடி, அவர்களின் கடித எண் TAHAVD/04/2025/அ1, நாள் 18.02.2025–இல் மேற்படி இடத்தில் வார்டு உறுப்பினர், மற்றும் விவசாய சங்கத்தில் கடிதம் பெறப்பட்டு அந்த சாலையை மனைப்பிரிவு உரிமைதாரரால் சொந்த செலவில் அமைக்க மாமன்ற தீர்மான எண் 2766, நாள் 27.02.2025–இல் ஒப்புதல் அளித்து மேற்கண்ட நபருக்கு தன் சொந்த செலவில் வண்டிப்பாட்டை என்றும் வகைப்பாட்டில் உள்ள சாலை அமைக்க உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

இதில் மாநகராட்சியால் எந்த வித முறைகேடும் நடைபெறவில்லை என பணிந்து தெரிவிக்கப்படுகிறது.''

4. இம்மனு தொடர்பாக மனுதாரர், முதல் எதிர்மனுதாரரான ஆவடி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரரான M/s Sugali Enterprises Pvt. Ltd., ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 27.03.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 12.03.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 27.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"M/s.Sugali Enterprises Pvt.Ltd. ன் இயக்குநர் திரு.K.ராகேஷ் குமார் என்பவர் ஆவடி மாநகராட்சி, மண்டலம் 1, வார்டு எண்.3, மிட்டணமல்லி கிராமத்தில் உள்ள நில அளவை எண்.17/9, 17/11, 22/2, 22/5, 22/6, 22/8, 22/9, 22/11, 23/2, 23/3, 23/7, 23/8 மற்றும் 24/1, பிளாக் எண் 5 அமைந்துள்ள 26308 சதுர மீட்டர் நிலத்தினை CMDA Approval No.23/PPT/LO/234/2024-ன்படி மனைகளாக பிரித்து குடியிருப்பு மனைகளாக மாற்றியுள்ளார். இதற்கு ஆவடி மாநகராட்சி அதிகாரிகள் கள ஆய்வு செய்யாமலேயே ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

மனைப்பிரிவு லே–அவுட்டில் போகும் வழி சாலை சுமார் 31 அடி இருக்க வேண்டும். ஆனால் 16 அடி வரை தார் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மனை உரிமையாளர் அரசுக்கு சொந்தமான வண்டிப்பாட்டை இடத்தின் அருகில் உள்ள பைபாஸ் சாலை வரை ஆக்கிரமித்து தார் சாலை அமைத்துள்ளார். மனைப்பிரிவில் ஏராளமான பேனர்கள் அனுமதியின்றி அமைத்துள்ளனர். ஆவடி மாநகராட்சி அலுவலர்களால் டெண்டர் ஏதும் விடப்படவில்லை. இந்த லே–அவுட்டில் 6–$^{1}/_{2}$ ஏக்கர் உள்ள பகுதியில் கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இங்குள்ள வீடுகளிலிருந்து கழிவு நீர் செல்வதற்கு வசதிகள் இல்லை. மேலும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971–ன் கீழ் வசூலிக்கப்பட வேண்டிய கட்டணங்கள் வசூலிக்காமலும் மனை சப்டிவிசனுக்கு குறைவான கட்டணமும் ஆவடி மாநகராட்சியால் வசூலிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட புகார்கள் தொடர்பாக பலமுறை ஆவடி மாநகராட்சிக்கு மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனால் ஆவடி மாநகராட்சிக்கு பெரும் நிதி இழப்பீடு ஏற்பட்டுள்ளது. எனவே மேலே குறிப்பிட்டுள்ள மனைபிரிவிற்கு அளித்த அங்கீகாரத்தை ரத்து செய்யுமாறு ஆவடி மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்."

6. முதல் எதிர்மனுதாரர் சார்பாக ஆவடி மாநகராட்சி உதவி நகர திட்டமிடுநர் மற்றும் உதவியாளர் ஆகியோர் 27.03.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

"(1) ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மிட்டணமல்லி கிராமம், சர்வே எண் 17/9, 17/11, 22/2, 22/5, 22/6, 22/8, 22/9, 22/11, 23/2, 23/3, 23/7, 23/8 மற்றும் 24/1 பிளாக் எண் 5–இல் 26,308 சதுர மீட்டர் இடத்தில் 154 மனைகள் கொண்ட மனைப்பிரிவு அமைக்க சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் செயல்முறை எண் PPD/LO No.234/2024 dated 23/10/2024. கடித எண் Layout–1/13/2024 நாள் 23.10.2024 இல் அனுமதி அளிக்கப்பட்டு, ஆவடி மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண் 2766, நாள் 27.02.2025ல் நிறைவேற்றப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

(2) மேற்கண்ட மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகள் அனைத்தும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் ஆவடி மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் மனுதாரரே சாலை மற்றும் கழிவு நீர் கால்வாய் ஆகியவை அமைத்துக் கொடுத்துள்ளார். மேலும் மின்வாரியம் மூலம் 25 எண்ணிக்கையிலான மின் கம்பிகள் அமைக்கப்பட்டு, 40 எண்ணிக்கையிலான சோலார் மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது. மேலும் மேற்படி சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய், மின் விளக்குகள் தரமானதாக உள்ளது என மாநகராட்சி பொறியாளர் சான்று அளித்துள்ளார். மேலும், மூன்றாம் நபரான Vel Tech பொறியியல் கல்லூரி பேராசிரியர்கள் மூலம் சான்றளிக்கப்பட்டுள்ளது. மேலும் குடிநீர் வசதி, பாதாள சாக்கடை வசதி

மற்றும் இதர வசதிகளுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ரூ.38,06,000/– ஆவடி மாநகராட்சி கருவூலத்தில் 09.04.2025 அன்று செலுத்தப்பட்டுள்ளது. மேலும் 154 மனைகளுக்கு மாநகராட்சி 13 அரையாண்டு காலிமனை வரி விதிப்பு செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டுள்ளது. ஆவடி மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சாலை ஆவணத்திற்கு இறுதி ஒப்புதல் ஆவடி மாநகராட்சி மாமன்ற தீர்மான எண் 2764 நாள் 27.02.2025–ன்படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(3) மேற்படி மனைப்பிரிவிற்கு பிளாக் எண் 5, நில அளவு எண்கள் 16, 1, 14/5, 11/2–இல் கண்ட வண்டிப்பாட்டை என்கிற வகைப்பாட்டில் உள்ள சாலைக்கு அணுகு சாலை வைத்து சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அனுமதி அளித்துள்ளது. மேற்படி சாலை தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி விதிகள், 2019–இல் தெரிவித்துள்ள விதிகளுக்கு உட்பட்ட சாலை என்பதால் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் மேற்படி சாலையை அணுகு சாலையாக கொண்டு மனைப்பிரிவிற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் ஒப்புதல் அளித்த வரைப்படத்தில் கண்டுள்ளதன்படி 24 அடி சாலை அமைக்கப்பட்டுள்ளது.

(4) மனைப்பிரிவில் உள்ள வண்டிப்பாட்டை சாலையை தன் சொந்த செலவில் மேம்பாடு செய்ததாக லே அவுட் உரிமையாளர் தெரிவித்ததால், ஆவடி தாசில்தார் அவர்கள் 18.02.2025 மேற்படி சாலை அமைக்க ஆட்சேபனை இல்லை என தடையின்மைச் சான்று பெற்றும், வார்டு உறுப்பினர் மற்றும் விவசாய சங்கத்தில் அனுமதி கடிதமும் பெறப்பட்டு அச்சாலையை மனைப்பிரிவு உரிமையாளரால் சொந்த செலவில் அமைத்துக் கொள்ள ஆவடி மாநகராட்சி 27.02.2025 நாளிட்ட தீர்மானத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.

மனுதாரர் தெரிவித்த பேனர்கள் ஆவடி மாநகராட்சியால் 16.02.2026 அன்று அகற்றப்பட்டது.

எனவே மேற்கண்ட மனைப்பிரிவில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.''

7. இரண்டாம் எதிர்மனுதாரர் 27.03.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

8. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், முதலாம் எதிர்மனுதாரரான ஆவடி மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கைகள், உதவி நகர திட்டமிடுநர் மற்றும் உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

M/s.Sugali Enterprises Pvt.Ltd. ன் இயக்குநர் ஆவடி மாநகராட்சி, மண்டலம் 1, வார்டு எண்.3, மிட்டணமல்லி கிராமத்தில் உள்ள நில அளவை எண்.17/9, 17/11, 22/2, 22/5, 22/6, 22/8, 22/9, 22/11, 23/2, 23/3, 23/7, 23/8 மற்றும் 24/1, பிளாக் எண் 5 அமைந்துள்ள 26308 சதுர மீட்டர் நிலத்தினை CMDA Approval No.PPDT/LO/234/2024-ன்படி மனைகளாக பிரித்து குடியிருப்பு மனைகளாக மாற்றியுள்ளதை ஆவடி மாநகராட்சி அதிகாரிகள் கள ஆய்வு செய்யாமலேயே ஒப்புதல் அளித்துள்ளார்கள் என்பதும், மனைப்பிரிவு லே–அவுட்டில் போகும் வழி சாலை சுமார் 31 அடி இருக்க வேண்டியதற்கு, 16 அடி வரை தார் சாலை அமைக்கப்பட்டுள்ளது என்பதும், மனை உரிமையாளர் அரசுக்கு சொந்தமான வண்டிப்பாட்டை இடத்தின் அருகில் உள்ள பைபாஸ் சாலை வரை ஆக்கிரமித்து தார் சாலை அமைத்துள்ளார் என்பதும், மனைப்பிரிவில் டெண்டர் ஏதும் விடாமல் ஏராளமான பேனர்கள் அனுமதியின்றி அமைத்துள்ளனர் என்பதும், இந்த லே–அவுட்டில் 6–$^1/_2$ ஏக்கர் உள்ள பகுதியில் கால்வாய் அமைக்கப்பட்டு,ள்ளது என்பதும், இங்குள்ள வீடுகளிலிருந்து கழிவு நீர் செல்வதற்கு வசதிகள் இல்லை என்பதும், தமிழ்நாடு

மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971–ன் கீழ் வசூலிக்கப்பட வேண்டிய கட்டணங்கள் வசூலிக்காமலும் மனை சப்டிவிசனுக்கு குறைவான கட்டணமும் ஆவடி மாநகராட்சியால் வசூலிக்கப்பட்டுள்ளது என்பதும், மேற்கண்ட புகார்கள் தொடர்பாக பலமுறை ஆவடி மாநகராட்சிக்கு மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால், ஆவடி மாநகராட்சிக்கு பெரும் நிதி இழப்பீடு ஏற்பட்டுள்ள நிலையில், மேலே குறிப்பிட்டுள்ள மனைபிரிவிற்கு அளித்த அங்கீகாரத்தை ரத்து செய்யுமாறு ஆவடி மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மிட்டணமல்லி கிராமம், சர்வே எண் 17/9, 17/11, 22/2, 22/5, 22/6, 22/8, 22/9, 22/11, 23/2, 23/3, 23/7, 23/8 மற்றும் 24/1 பிளாக் எண் 5–இல் 26,308 சதுர மீட்டர் இடத்தில் 154 மனைகள் கொண்ட மனைப்பிரிவு அமைக்க சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அனுமதி எண்.PPD/LO No.234/2024 dated 23/10/2024. கடித எண் L1/0131/2024 நாள் 23.10.2024 இல் அனுமதி அளிக்கப்பட்டு, ஆவடி மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண் 2766, நாள் 27.02.2025ல் நிறைவேற்றப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது என்பதும், மேற்கண்ட மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகள் அனைத்தும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் ஆவடி மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளதால், மேற்படி இடத்தில் மனுதாரரே சாலை மற்றும் கழிவு நீர் கால்வாய் ஆகியவை அமைத்துக் கொடுத்துள்ளார் என்பதும், மின்வாரியம் மூலம் 25 எண்ணிக்கையிலான மின் கம்பிகள் அமைக்கப்பட்டு, 40 எண்ணிக்கையிலான சோலார் மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது என்பதும், மேற்படி சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய், மின் விளக்குகள் தரமானதாக உள்ளது என மாநகராட்சி பொறியாளர் சான்று அளிக்கப்பட்டும், மூன்றாம் நபரான Vel Tech பொறியியல் கல்லூரி பேராசிரியர்கள் மூலமும் சான்றளிக்கப்பட்டுள்ளது என்பதும், குடிநீர் வசதி, பாதாள சாக்கடை வசதி மற்றும் இதர வசதிகளுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ரூ.38,06,000/– ஆவடி மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது என்பதும், 154 மனைகளுக்கு மாநகராட்சி 13 அரையாண்டு காலிமனை வரி விதிப்பு செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டுள்ளது என்பதும், ஆவடி மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சாலைக்கான ஆவணத்திற்கு இறுதி ஒப்புதல் ஆவடி மாநகராட்சி மாமன்ற தீர்மான எண் 2764 நாள் 27.02.2025–ன்படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்பதும், மேற்படி மனைப்பிரிவிற்கு பிளாக் எண் 5, நில அளவு எண்கள் 16, 1, 14/5, 11/2–இல் அமைந்துள்ள வண்டிப்பாட்டை என்கிற வகைப்பாட்டில் உள்ள சாலைக்கு அணுகு சாலை தமிழ்நாடு ஒருங்கிணைந்த கட்டிட அபிவிருத்தி விதிகள், 2019–இல் தெரிவித்துள்ள விதிகளுக்கு உட்பட்ட சாலை என்பதால் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் மேற்படி சாலையை அணுகுசாலையாக கொண்டு மனைப்பிரிவு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்பதும், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் ஒப்புதல் அளித்த வரைப்படத்தில் கண்டுள்ளதன்படி 24 அடி சாலை அமைக்கப்பட்டுள்ளது என்பதும், மனைப்பிரிவில் உள்ள வண்டிப்பாட்டை சாலையை தன் சொந்த செலவில் மேம்பாடு செய்ததாக லே அவுட் உரிமையாளர் தெரிவித்ததால், ஆவடி தாசில்தார் அவர்களிடம் 18.02.2025 மேற்படி சாலை அமைக்க ஆட்சேபனை இல்லை என தடையின்மைச் சான்று பெற்றும், வார்டு உறுப்பினர் மற்றும் விவசாய சங்கத்தில் அனுமதி கடிதமும் பெறப்பட்டு அச்சாலையை மனைப்பிரிவு உரிமையாளரால் சொந்த செலவில் அமைத்துக் கொள்ள ஆவடி மாநகராட்சி 27.02.2025 நாளிட்ட தீர்மானத்தில் ஒப்புதல் அளித்துள்ளது என்பதும், மனுதாரர் தெரிவித்த பேனர்கள் ஆவடி மாநகராட்சியால் அகற்றப்பட்டது என்பதும், மேற்கண்ட மனைப்பிரிவில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என்பதும் எதிர்மனுதாரரான ஆவடி மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கைகள், உதவி நகர திட்டமிடுநர் மற்றும் உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மிட்டனமல்லி கிராமம், சர்வே எண் 17/9, 17/11, 22/2, 22/5, 22/6, 22/8, 22/9, 22/11, 23/2, 23/3, 23/7, 23/8 மற்றும் 24/1 பிளாக் எண் 5–இல் 26,308 சதுர மீட்டர் இடத்தில் 154 மனைகள் கொண்ட மனைப்பிரிவு அமைக்க சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அனுமதி அளித்துள்ளதும், மேலும் அங்கு அமைந்துள்ள சாலைகள் அனைத்தும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் ஆவடி மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளதால், மேற்படி இடத்தில் மனுதாரரே சாலை மற்றும் கழிவு நீர் கால்வாய் ஆகியவை அமைக்க அனுமதியும், அதற்கு மூன்றாம் நபரான Vel Tech பொறியியல் கல்லூரியால் சான்று அளிக்கப்பட்டுள்ளது என்றும், ஆவடி மாநகராட்சி ஆணையர் தனது அறிக்கையிலும், உதவி நகர திட்டமிடுநர் மற்றும் உதவியாளர் ஆகியோர் தங்களுடைய வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தாலும், மனுதாரர் மேற்கண்ட மனைப்பிரிவில் 31 அடி சாலைக்கு பதில் 16 அடி சாலை அமைக்கப்பட்டுள்ளது என்றும், வண்டிப்பாட்டை அருகில் உள்ள பைபாஸ் சாலை வரை ஆக்கிரமித்து தார் சாலை அமைக்கப்பட்டுள்ளது என்றும், அரசு சட்டவிதிகளின்படி வசூலிக்கப்பட வேண்டிய கட்டணங்கள் வசூலிக்கவில்லையென்றும், மனை Sub-division–க்கு குறைவான கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது என்று மனுதாரர் தெரிவித்த புகார் தொடர்பாக உதவி ஆணையரின் தலைமையில் கள ஆய்வு மேற்கொண்டு, அவ்வாய்வின் அடிப்படையில் உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்குமாறு ஆவடி மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 09-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. C. ஹரிபாபு,
எண் 21, ஹை ஸ்கூல் தெரு,
மிட்டணமல்லி, ஆவடி, சென்னை–600 055.

(2) ஆணையாளர், ஆவடி மாநகராட்சி,
ஆவடி, சென்னை–600 054.

(3) M/s Sugali Enterprises Pvt. Ltd.,
Door No.45/32, A-Block, Second Floor, Flat No.53,
6th Street, Anna Nagar, Chennai-600 102.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவர் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

செயலாளர். 12/6/26